சுற்றறிக்கை இலக்கம் 2020/03

எனது இலக்கம் :- FE/111/2020
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

2020.08.12

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் ஏனைய நியதிச் சட்ட ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் மாகாண சபைகளின் அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள் மற்றும், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்து கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தவிசாளர்கள் / பொது முகாமையாளர்கள்,

**<u>பாராளுமன்றத் தேர்தல் 2020.08.05</u>**

**<u>தேர்தல் பணியாட் குழுவினருக்கான கொடுப்பனவுகள்</u>**

2020.08.05 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவுறுத்தல்களுக்கமைய தேர்தல் கடமையில் ஈடுபட்ட பணியாட் குழுவினருக்குக் கொடுப்பனவு செய்ய முடிந்த கட்டணத் தொகைகள் மற்றும் அக்கொடுப்பனவுகளோடு தொடர்புடைய கணக்குகள் தொடர்பான நடபடிமுறை என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

02. தேர்தல் கடமைக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள முன்னர் இச்சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை நன்கு வாசித்துப் பார்த்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு உங்களது கணக்கு விடயத்துக்குப் பொறுப்பான பணிக்குழுவினருக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும். இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் மீள்நிரப்புச் செய்யப்படமாட்டாதென்பதோடு, அத்தகைய கொடுப்பனவுகள் தொடர்பான முழுப் பொறுப்பினையும் கொடுப்பனவு செய்கின்ற அலுவலரே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

03. தேர்தல் பணியாட் குழுவினருக்குக் கொடுப்பனவை மேற்கொள்ளவேண்டிய நிலையங்கள் மற்றும் அந்நிலையங்களினூடாக மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இரண்டு வகுதிகளாக வகையீடு செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவை மேற்கொள்கின்ற அலுவலர் அந்நிலையங்களையும் கொடுப்பனவுகளையும் தெளிவாக இனங்கண்டு அதற்கமைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(அ). தமது நிரந்தர சேவை நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள்

தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளில் ஈடுபட்ட அரசாங்க அலுவலகங்கள் / நிறுவனங்களின் நிரந்தரப் பணியாட் குழுவினருக்கும் ஏனைய உதவியாளர்களுக்கும் கீழே காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய தமது நிரந்தர சேவை நிலையத்தினூடாகப் பிரயாணச் செலவினங்களையும் படிகளையும் கொடுப்பனவு செய்ய முடியும். அக்கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் இச்சுற்றறிக்கையின் 10.1 மற்றும் 10.2 ஆகிய உப பந்திகளில் காட்டப்பட்டுள்ள அட்டவணைகளோடு மேலே காட்டப்பட்டுள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அந்நிதித்தொகை தேர்தல் ஆணைக்குழுவினால் மீள்நிரப்புச் செய்யப்படும்.

I. வலயத்திற்குப் பொறுப்பான தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவராக அல்லது வாக்கெடுப்புப் பிரிவு / பிரதேச செயலக மட்டத்தில் நிறுவப்பட்ட இணைப்பு அலுவலகமொன்றில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் ஒருவராகப் பணியாற்றியமை. (பிரதேச செயலகங்களில் வாக்கெடுப்பு நிலைய அலுவலர் குழாத்தைப் பேணுகின்ற பணிகளை மேற்கொண்ட பணியாள் குழுவினர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படுகின்ற படிகள் தவிர).

II. வாக்கெடுப்பு நிலையமொன்றில் அல்லது வாக்கெடுப்புப் பிரிவு / பிரதேச செயலக மட்டத்தில் அமைக்கப்பட்ட இணைப்பு அலுவலகமொன்றில் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர், மேலதிக சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர், கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர், விஷேட / மேலதிக கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர், எழுதுநர் அல்லது அலுவலக உதவியாளராகப் பணியாற்றியமை.(களுத்துறை, கண்டி, காலி, அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்களின் வாக்கெடுப்பு நிலையங்களின் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் படிகள் தவிர்ந்த).

III. வாக்குப்பெட்டிகள் விநியோகிக்கப்படுகின்ற மண்டபமொன்றில் வாக்குச்சீட்டுக்கள் மற்றும் வாக்குப்பெட்டிகள் ஆகியவற்றை விநியோகிக்கின்ற மற்றும் மீளக் கையேற்கின்ற பணிகளில் ஈடுபட்டமை.

IV. வாக்கெண்ணல் மண்டபமொன்றில் வாக்கெண்ணும் பணிகளில் மற்றும் முடிவுகளை வெளியிடும் நிலையமொன்றில் முடிவுகளை வெளியிடுகின்ற / அட்டவணைப்படுத்துகின்ற பணிகளில் ஈடுபட்டமை.

தேர்தல் கடமைக்காக நியமனக் கடிதமொன்றும் கடமைகளை ஆற்றியமைக்காக வரவுச் சான்றிதழொன்றும் வழங்கப்பட்டுள்ளமையால் மேற்குறித்த கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அந்த ஆவணங்கள் கொடுப்பனவு வவுச்சருடன் இணைக்கப்பட்டிருத்தல் கட்டாயமாகும்.

(ஆ). மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளில் சேவையிலீடுபட்ட பணியாட் குழுவினருக்கு அவர்கள் சேவையாற்றிய மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தினால் அவர்களுக்கான படிகள் கொடுப்பனவு செய்யப்படும்.

I. நியமனக் கடிதங்கள் / எழுத்துக் கோப்புக்களைக் கையேற்பதற்கு முந்திய தினமொன்றில் சமுகமளித்தமை.

II. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய பூர்வாங்கப் பணிகளில் ஈடுபட்டமை.

III. நலன்புரி / சுகாதாரம் மற்றும் சுகநலப் பாதுகாப்பு / போக்குவரத்து / மண்டபங்களைத் தயார்படுத்தல் / பொது வசதிகள் / இணைப்புக் குழுக்கள் போன்றவற்றில் சேவையாற்றியமை.

IV. தேர்தல் பிணக்குகளைத் தீர்த்தல் பிரிவில் ( EDR) பணியாற்றியமைக்கான கொடுப்பனவு.

V. பிரதேச செயலகங்களில் வாக்கெடுப்பு நிலைய பணியாள் குழுவினர்களுக்கான குழாத்தினைப் பேணும் பணிகளில் ஈடுபட்ட பணியாள் குழுவினருக்கான படிகள்.

VI. வாக்களிப்பு நிலையங்களுக்கு வாகனங்களை எடுத்துச் சென்ற தலைமை தாங்கும் அலுவலர்களினதும் அவ்வாகனங்களின் சாரதிகளினதும் படிகளைக் கொடுப்பனவு செய்தல்.

VII. சேவை எதிர்பார்ப்போடு காத்திருந்தமை (காத்திருத்தல் சேவை).

VIII. கோவிட் - 19 தொற்றுப் பரவலைத் தவிர்ப்பதற்காக இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் சிறப்புச் சேவையொன்றை மேற்கொண்ட சுகாதார பணியாட் குழுவினருக்காக இக்கொடுப்பனவுச் சுற்றறிக்கையின் 7.10 உப பிரிவுக்கமைய உரிய படிகளைக் கொடுப்பனவு செய்தல்.

IX. களுத்துறை, கண்டி, காலி, அம்பாறை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களின் வாக்களிப்பு நிலையங்களின் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களின் படிகள் (இம்மாவட்டங்களில் வாக்களிப்பு நிலையக் கடமைகளை ஆற்றிய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு முற்பணத்தொகை வழங்கப்பட்டுள்ளமையால் படிவளைக் கொடுப்பனவு செய்கையில் முற்பணத் தொகையைக் கழிவீடு செய்ய வேண்டியுள்ளது.)

X. தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள் / தேர்தல் அலுவலகங்களினால் மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டுமென பிரத்தியேகமாக குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள்.

XI. மேற்குறித்த 03 ஆம் பந்தியின் (அ) உப பந்தியின் கீழ் குறிப்பாகக் காட்டப்படாத ஏனைய தேர்தல் கடமைகளுக்கான கொடுப்பனவுகள்.

மேற்குறித்த (ஆ) உப பந்தியின் கீழான பணிகளில் சேவையில் ஈடுபட்ட நிரந்தரப் பணியாட் குழுவினர் மற்றும் ஊழியர்கள் உரிய தெரிவத்தாட்சி அலுவலர் / பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கமைய, உரிய வவுச்சர்கள் மற்றும் துணை ஆவணங்களை முடிந்தளவு விரைவாக தாம் பணியாற்றிய மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

## 04. பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகள்

தேர்தல் கடமைக்கான நியமனக் கடிதமொன்றின் மூலமும் நியமனம் செய்யப்பட்ட பணியை ஆற்றியமைக்கான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலமும் நிரூபிக்கப்படுமிடத்து மேற்குறித்த 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் கடமைக்காக கீழே காட்டப்பபட்டுள்ள விஷேட சந்தர்ப்பங்களையும் உள்ளடக்கிய வகையில், தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அலுவலர்களுக்கு உரித்துண்டு.

4.1 உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரொருவர், மேலதிகத் தலைமைதாங்கும் அலுவலரொருவர், கனிட்ட தலைமைதாங்கும் அலுவலரொருவர், விஷேட கனிட்ட தலைமைதாங்கும் அலுவலரொருவர், வாக்களிப்பு நிலைய எழுதுநரொருவர் அல்லது அலுவலக உதவியாளரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள எந்தவோர் அலுவலரும் கடமைக்கான பிரயாணத்தை ஆரம்பிக்கின்ற நிலையமாகக் கருதப்படவேண்டியது, அலுவலரின் சேவை நிலையமாகும். சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரொருவர் அழைத்துச் செல்கின்ற அரசாங்க ஊழியரல்லாத அலுவலக உதவியாளர் ஒருவரின் கற்பனைச் சேவை நிலையமாகக் கருதப்பட வேண்டியதும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் சேவை நிலையமேயாகும்.

4.2 அலுவலர் தான் வதிகின்ற வீட்டிலிருந்து பிரயாணத்தை ஆரம்பிப்பவராகவிருந்து அவரது வீடு அவரது சேவை நிலையத்திலிருந்து 24 கிலோ மீற்றர் தூரத்திற்குள் அமையப்பெற்றுமிருந்தால், அவ்வீடு அவரின் கற்பனை சேவை நிலையமாகக் கருதப்பட்டு கொடுப்பனவை மேற்கொள்ள முடியும்.

4.3 மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு முன்கூட்டியே அறிக்கையிடுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அவரினால் தற்காலிகத் தங்குமிட வசதிகள் செய்துகொடுக்கப்படும். அவ்விடங்களில் தங்கியிருக்காமல் வேறோர் இடத்தில் தங்கியிருந்தால் அத்தகைய அலுவலரொருவருக்கு பிரயாணச் செலவினத்தைக்

கொடுப்பனவு செய்வது, தங்கியிருப்பதற்கென நிர்ணயிக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து ஆகக் கூடியது 07 கிலோமீற்றர் அளவுக்கு மாத்திரமேயாகும்.

4.4.I. தேர்தல் கடமைக்கான அவசர அழைப்புக் காரணமாக மாவட்டத் தேர்தல் அலுவலகம் ஒன்றிற்கு குறுகிய காலத்திற்குள் அறிக்கையிட வேண்டிவரின், அத்தகைய சந்தர்ப்பமொன்றில் அலுவலர் ஒருவருக்கு குளிரூட்டப்பட்ட பஸ் வண்டியொன்றினூடாகப் பிரயாணம் செய்யவேண்டி நேரிடலாம். அத்தகைய சந்தர்ப்பமொன்றில் பிரயாணத்திற்காக பஸ் வண்டியினால் வழங்கப்பட்ட பிரயாணச்சீட்டை பிரயாணச் செலவு வவுச்சரோடு இணைத்து சமர்ப்பிப்பாராயின், குளிரூட்டப்பட்ட பஸ் வண்டிக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட கட்டணத்தை மீள்நிரப்புச் செய்ய முடியும்.

II. தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமைய மைல் கூலிக் கட்டணம் உரித்தான வெளிக்கள உத்தியோகத்தர் ஒருவருக்கு மாவட்டத்திற்குள் மாத்திரம் மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தியமைக்காக கிலோமீற்றர் ஒன்றிற்கு ரூபா 2.00 வீதம் மைல் கூலியைக் கொடுப்பனவு செய்ய முடியுமென்பதோடு, தேர்தல் கடமைக்காக தமது மோட்டார் சைக்கிளைப் பயன்படுத்தியமையை உறுதிப்படுத்துகின்ற ஆவணமொன்றை தான் சேவையாற்றிய தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் / பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து பெற்றுப் பிரயாணச் செலவு வவுச்சரோடு சமர்ப்பித்தல் வேண்டும்.

4.5.I. வாக்களிப்பு நிலையமொன்றின் வாக்களிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்குக் கட்டளையிடப்பட்ட அலுவலரொருவர் தேர்தலுக்கு முந்திய இரவை தமது வாக்களிப்பு நிலையத்தில் அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் விதிக்கப்பட்டிருந்த இடமொன்றில் கழிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டு உண்மையிலேயே அவ்விடத்தில் இரவைக் கழித்துமிருப்பாராயின், பிரயாணம் செய்த தூர அளவைக் கருத்திலெடுக்காமல் தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத் தொகைக்கு ஏற்ப முழுமையான இணைந்த படியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

II. வாக்களிப்பு நிலையத்தில் இரவைக் கழிக்காத ஒருவருக்குக் கூட பிரயாணம் செய்த தூரத்தின் அளவு 11.2 கிலோமீற்றரிலும் / 7 மைலிலும் குறைவாகவிருக்கின்ற சந்தர்ப்பமொன்றில் தூர அளவைக் கருத்திலெடுக்காமல் இணைந்த படியில் அரைவாசியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

III. வாக்கெண்ணல் பணிகளுக்காக வாக்கெண்ணும் நிலையமொன்றில் இரவைக் கழித்திருந்த அலுவலர்களுக்கு பிரயாணம் செய்த தூர அளவைக் கருத்திலெடுக்காமல் அன்றைய தினத்திற்கு மாத்திரம் இணைந்த படியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

4.6 தேர்தலுக்கு முந்திய தினத்தன்று வாக்குப்பெட்டிகளின் விநியோகப் பணிகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு அப்பணியை நிறைவு செய்து வீடுகளுக்குச் செல்வதற்கு கால அவகாசம் உண்டு. ஆதலால் அன்றைய தினம் அப்பணிகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு இணைந்த படிகளைக் கொடுப்பனவு செய்ய முடிவது, அப்பணியை மேற்கொண்ட நிலையம் அவரின் நிரந்தர சேவை நிலையம் அமையப்பெற்றுள்ள மாநகர சபை அதிகார எல்லைக்கு வெளியே அமையப்பெற்றும், அக்கடமைகளில் ஈடுபட்ட நிலையம் இணைந்த படியைக் கொடுப்பனவு செய்வதற்காக தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள தூரத்தில் அமையப்பெற்றும் இருந்தால் மாத்திரமேயாகும்.

4.7. தேர்தல் கடமைக்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரங்களிலேயே அலுவலர்கள் பிரயாணம் செய்தல் வேண்டும். இணைந்த படிகள் முழுமையாக இவ்வடிப்படையிலேயே கொடுப்பனவு செய்யப்படுமென்பதோடு, அவ்வாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள தினங்களல்லாத வேறு தினங்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகளுக்கான செலவினங்கள் மீள்நிரப்புச் செய்யப்பட மாட்டா.

**05. விஷேட பிரயாணக் கட்டணம் (மைல் கட்டணம்)**

5.1 போக்குவரத்துப் பணிகள் தொடர்பான 2020.07.22 ஆம் திகதிய PE/2020/TR-12 ஆம் இலக்க போக்குவரத்துச் சுற்றறிக்கையில் (அனைத்துப் போக்குவரத்துப் பணிகளுக்குமான பொழிப்புப்படுத்தப்பட்ட பிரதான போக்குவரத்துச் சுற்றறிக்கை) குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் வேண்டும். அவ்வறிவுறுத்தல்களுக்குப் புறம்பாக நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அதற்காக எனது விஷேட அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5.2.I. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் / அவரால் போக்குவரத்துப் பணிகளுக்குப் பொறுப்பாகப் பணியாற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட குறிப்பான பதவிநிலை அலுவலரொருவரின் முன்னனுமதியின் கீழ் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரொருவர் தமது வாக்களிப்பு நிலையத்திற்கான வாக்குப்பெட்டிகளாதியவற்றினை எடுத்துச்செல்லல் மற்றும் வாக்களிப்பின் பின்னர் அவற்றை மீள எடுத்து வருதல் என்பவற்றிற்காக தம்மால் எடுத்துவரப்பட்ட வாகனமொன்றைப் பயன்படுத்தியிருப்பின் PE/2020/TR-08 ஆம் இலக்க மற்றும் 2020.07.06 ஆம் தேதிய போக்குவரத்துச் சுற்றறிக்கையில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு பெற்றோல் வாகனங்களுக்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூ.30.00 வீதமும், டீசல் வாகனங்களுக்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூ.20.00 வீதமும் என்ற விதத்தில் தனிப்பட்ட வாகனங்களுக்கான பிரயாணக் கட்டணங்களைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

II. சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் தன்னால் எடுத்துவரப்பட்ட வாகனத்தைச் செலுத்துவதற்காக ஈடுபடுத்திய அரசாங்க ஊழியரல்லாத தனிப்பட்ட சாரதியொருவருக்கு சம்பளமாக ஒரு நாளைக்கு ரூபா 1250.00 வீதம் கொடுப்பனவு செய்ய முடியும். மேலும், 12 மணித்தியால சேவைக் காலமொன்றைப் பூர்த்திசெய்துள்ள சந்தர்ப்பங்களில் ரூ.700.00 வீதத்திலான இணைந்த படியையும் மேலதிகமாகக் கொடுப்பனவு செய்ய முடியும். இப்படியைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற வவுச்சருடன் V-3 படிவத்தின் (சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரால் எடுத்துவரப்படுகின்ற தனிப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய படிவம்) பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும். தனியார் சாரதியின் படிகள் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரினால் சாரதிக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் அந்நிதி சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் பெயரில் மீள்நிரப்புச் செய்வதற்காக சாரதி தனது பணத்தைக் கையேற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கின்ற

அத்தாட்சிப் பத்திரமொன்றோ அல்லது கடிதமொன்றோ சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் வவுச்சரோடு இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

III. சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரினால் எடுத்துவரப்படுகின்ற வாகனமொன்று தேர்தல் கடமைக்காக ஈடுபடுத்தப்படின் மாத்திரம் அச்சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் பிரயாணச் செலவு விண்ணப்பம் மற்றும் தேர்தல் கடமைகளுக்கான ஏனைய வவுச்சர்கள், வரவுச் சான்றிதழ்கள் சகிதம் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

IV. வாக்களிப்பு நிலையக் கடமைகள் தவிர்ந்த வேறு தேர்தல் கடமைகளுக்களில் ஈடுபடுத்தப்பட்ட சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு தனியார் வாகனமொன்றில் வந்தமைக்கான மைல் கூலி கொடுப்பனவு செய்யப்படமாட்டா.

5.3.I. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் / அவரால் போக்குவரத்து நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகப் பணியாற்றுவதற்கென அதிகாரமளிக்கப்பட்ட குறிப்பான பதவிநிலை அலுவலரொருவரின் முன்னனுமதியின் கீழ் பிரதான வாக்கெண்ணும் அலுவலர் ஒருவராக தலைமை வாக்கெண்ணும் அலுவலராக / பிரதி தலைமை வாக்கெண்ணும் அலுவலராக, வாக்கெண்ணல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு <u>தனிப்பட்ட வாகனத்தை அல்லது வாழ்க்கைத் துணையின் வாகனத்தைப்</u> பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்காக விஷேட காரணங்களின் கீழ் திருமணமாகாத அலுவலர்களுக்கு தமது தந்தை, தாய் சகோதர சகோதரிகளுக்குரித்தான வாகனத்தையும் திருமணமான அலுவலர்களுக்கு தமது தந்தை, தாய், பிள்ளைகளின் வாகனங்களையும் பயன்படுத்த முடியும். ஆதலால் அன்றைய தினம் எடுத்துவரப்பட்ட தனிப்பட்ட வாகனம் தொடர்பான தகவல்களை V-4 படிவத்தின் மூலம் நிரூபிப்பாராயின் தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 8.2 ஆம் பந்திக்கமைய அவர்களுக்கு பெற்றோல் வாகனமொன்றுக்காக ஒரு கிலோமீற்றருக்கு ரூ.12.00 வீதமும் டீசல் வாகனமொன்றிற்கு ஒரு கிலோமீற்றருக்கு ரூ.8.00 வீதமும் கொடுப்பனவு செய்ய முடியும்.

II. போதியளவு வாகனங்கள் இல்லாத காரணத்தினால் கம்பஹா, களுத்துறை, கேகாலை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் வலயக் கடமைக்காக வெளியிலிருந்து வருகைதருகின்ற உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் தனிப்பட்ட வாகனங்களை ஈடுபடுத்த அனுமதியளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு தெரிவத்தாட்சி அலுவலரின் அனுமதியின் கீழ் வலயங்களுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக தமது தனிப்பட்ட வாகனத்தில் தேர்தல் கடமைகளை ஆற்றிய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும், மேற்குறித்த 5.3.I ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவை மேற்கொள்ள முடியும். மேலும் வலயக் கடமைகளுக்காக சில அபாயங்களை எதிர்நோக்கியவண்ணம் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட வேண்டிவருவதால் 5.3.III ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படிக்கு மேலதிகமாக 1000.00 ரூபா (ஆயிரம் ரூபா) நிதியை முழு ஓட்டக் காலப்பகுதிக்குமாக கொடுப்பனவு செய்ய முடியும்.

III. தனிப்பட்ட வாகனத்தை எடுத்துச்செல்கின்ற மேற்குறித்த 5.3.1 மற்றும் 5.3.II என்ற உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களுக்கு வாகனத்தைச் செலுத்திய தூர அளவிற்கேற்ப செல்வதற்கும் வருவதற்கும் (முழுப் பயணத்திற்கும்) கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான விஷேட படியொன்றைக் கொடுப்பனவு செய்ய முடியும். இப்படியைப் பெற்றுக்கொள்வதற்காக வாகனத்தைப் பயன்படுத்திய அலுவலர் பொது 35 வவுச்சரொன்றில் கையொப்பமிட்டு பிரயாணச் செலவு வவுச்சருடன் அதனைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| அ. சேவை நிலையம் அமையப்பெற்றுள்ள மாவட்டத்திற்குள் | ரூ.900.00 |
| ஆ. தனது நிரந்தர சேவை நிலையம் அமையப்பெற்றுள்ள இடத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கான தூரம் கிலோ மீற்றர் 50 வரை | ரூ.1,300.00 |
| இ. தனது நிரந்தர சேவை நிலையம் அமையப்பெற்றுள்ள இடத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கான தூரம் கிலோ மீற்றர் 100 வரை | ரூ.1,700.00 |
| ஈ. தனது நிரந்தர சேவை நிலையம் அமையப்பெற்றுள்ள இடத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கான தூரம் கிலோ மீற்றர் 150 வரை | ரூ.2,100.00 |
| உ. தனது நிரந்தர சேவை நிலையம் அமையப்பெற்றுள்ள இடத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கான தூரம் கிலோ மீற்றர் 200 வரை | ரூ.2,500.00 |
| ஊ. தனது நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கான தூரம் கிலோமீற்றர் 250 வரை | ரூ.2,900.00 |
| எ. தனது நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கான தூரம் கிலோமீற்றர் 300 வரை | ரூ.3,300.00 |
| ஏ. தனது நிரந்தர சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டத்தின் பிரதான நகரத்திற்கான தூரம் கிலோமீற்றர் 300 இலும் அதிகமாயின் | ரூ.3,700.00 |

5.4 தலைமை வாக்கெண்ணும் அலுவலரொருவர், பிரதித் தலைமை வாக்கெண்ணும் அலுவலரொருவர் வாக்கெண்ணல் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் அல்லது வலயத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவர் தமது வாகனத்திற்கு தனிப்பட்ட சாரதியொருவரை எடுத்துச் செல்வதற்கு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் / அவரால் போக்குவரத்து விடயத்திற்குப் பொறுப்பாக செயலாற்றுவதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் அனுமதி வழங்கப்பட்டிருப்பின், அவ்வாகனங்களின் தனிப்பட்ட சாரதிகளுக்கு 5.2.II இல் குறிப்பிடப்பட்டுள்ள படிகளைக் கொடுப்பனவு செய்ய முடியும். அக்கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்காக

சாரதியின் பெயரிலான வவுச்சரொன்றைத் தயரித்து V-5 படிவத்தின் (தனிப்பட்ட வாகனத்தை எடுத்துவருகின்ற சாரதியின் வரவுச் சான்றிதழ்) பிரதியொன்றோடு சமர்ப்பிக்க வேண்டுமென்பதோடு, அது சாரதி பணியாற்றிய அலுவலரின் வவுச்சரோடு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தனிப்பட்ட வாகனங்களை எடுத்துச் செல்பவர்களின் சாரதிகளின் கொடுப்பனவுகள் எவையும் அலுவலரின் பெயரில் மீள்நிரப்புச் செய்யப்பட மாட்டாது. தனிப்பட்ட சாரதியின் படிக்காக சாரதியின் பெயருக்கென எழுதப்பட்ட ஒரு காசோலை மூலம் மாத்திரம் கொடுப்பனவைச் செய்தல் வேண்டும்.

5.5 இவ்வாறு தனிப்பட்ட வாகனத்தைப் பாவிப்பதற்காக கொடுப்பனவு செய்ய முடிவது, மைல் கட்டணம் உரித்தான அலுவலர்களுக்கு மாத்திரமே என்பதோடு, தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டேயாகும்.

5.6.I தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட குறித்தொதுக்கப்பட்ட வாகனங்களுக்கு உரிய மாவட்டத்திற்குச் செல்வதற்கும் வருவதற்கும் தேவைப்பட்ட எரிபொருளுக்காக செலவிடப்பட்ட நிதியை மீள்நிரப்புச் செய்வதற்கென அறிமுகப்படுத்தப்பட்டுள்ள AV-01 படிவத்தையும் பொது 35 வவுச்சரையும் நிரப்பி அதன் பின்புறத்தில் கையொப்பமிட்டு உரிய பற்றுச்சீட்டுக்களுடன் தேர்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதனூடாக அலுவலரின் பெயரில் அச்செலவினத்தை மீள்நிரப்புச் செய்துகொள்ள வேண்டும்.

5.6.II குழாத்திற்கான வாகனங்களுக்குப் பெற்றுக்கொண்ட எரிபொருள் செலவுகளை மீளளிப்புச் செய்வதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள PV–01 படிவத்தை பூரணப்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்து அந்த எரிபொருள் செலவுகளை குறித்த நிறுவனத்தின் பெயரில் மீள்நிரப்புச் செய்துகொள்ள வேண்டும்.

5.7. தேர்தல் கடமைக்காக தனிப்பட்ட வாகனத்தை எடுத்துச் செல்வதற்கு / வருவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் பிரயாணத்திற்காக அதிவேக கடுகதிப் பாதையைப் பயன்படுத்துவார்களாயின், அக்கட்டணத்தையும் மீள்நிரப்புச் செய்துகொள்ள முடியும். அதற்குரிய பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதியை பிரயாணச் செலவு வவுச்சரோடு இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**6. அரசாங்க சேவையாளர்களல்லாத ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்**

6.1. சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரினால் சேவையிலீடுபடுத்தப்பட்ட அரசாங்க ஊழியரல்லாத அலுவலக உதவியாளர் ஒருவருக்கு வாக்கெடுப்போடு தொடர்புடைய முழுப் பணிகளுக்குமாக இங்கு 7.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலக உதவியாளர் படியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

6.2 அத்தகைய ஊழியரொருவருக்கு தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒரு நாளைக்கான ஆகக் குறைந்த இணைந்த படியாக ரூ.700.00 வீதம் உரிய நாட்களின் எண்ணிக்கைக்கமைய கொடுப்பனவு செய்ய முடியும். அத்தகைய ஊழியர் தேர்தல் கடமைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருப்பின், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் அவ்வூழியருக்குரிய தொகையைக் கொடுப்பனவு செய்துவிட்டு அதனை மீள்நிரப்புச் செய்துகொள்ள முடியும்.

6.3 உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவருக்கு தனது தேர்தல் கடமைப் பயணத்தில் அலுவலக உதவியாளரொருவரை அல்லது வேறொருவரை அழைத்துச் செல்ல அனுமதி வழங்கப்படவில்லையாதலால், உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அழைத்து வரப்படுகின்ற உதவியாளருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடாது.

**7. படிகள்.**

7.1 மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் எழுத்து மூல நியமனமொன்று வழங்கப்பட்டு தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலரொருவர் / ஊழியரொருவர் கீழ் குறிப்பிட்டவாறான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் அதனை நிரூபிப்பாராயின் அவர்களுக்கு ஒவ்வொரு பணிக்குமாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான படிகளைக் கொடுப்பனவு செய்யமுடியும்.

| பணியாட் குழுவினர் | கொடுப்பனவு செய்ய வேண்டிய படி | வரவுச் சான்றிதழின் இலக்கம் |
|---|---|---|
| வலயத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்காக | ரூ.4,500.00 | CE 46 |
| சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்காக | ரூ.4,500.00 | CE 19/1 |
| மேலதிக சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்காக | ரூ.3,750.00 | CE 19 |
| விஷேட / மேலதிக கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்காக | ரூ.2,600.00 | CE 19 |
| கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள், எழுதுநர்களுக்காக | ரூ.2,400.00 | CE 19 |
| அலுவலக உதவியாளர்களுக்காக | ரூ.2,000.00 | CE 19 |

★ கண்காணிப்பு நிலையக் கடமைகளையாற்றிய சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு மாத்திரம் குறுந்தகவல் செய்திகளை அனுப்பிவைத்தமைக்காக தொடர்பாடல் கட்டணமாக ரூ.100.00 நிதியை எங்களது வாக்களிப்பு நிலையப் படியோடு சேர்த்துக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

7.2 வாக்குப் பெட்டிகளை விநியோகிப்பதற்காக CE 47 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமிடத்து தேர்தலுக்கு முந்திய தினம் சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கு வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச்சீட்டுக்கள் என்பவற்றை விநியோகித்த அலுவலர்களுக்கும், வாக்குப் பெட்டிகளைக் கையேற்றுக் கொண்டமைக்காக CE 48 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம்

நிரூபிக்கப்படுமிடத்து தேர்தல் தினத்தன்று பிற்பகலில் வாக்குப்பெட்டிகளாதியவற்றை மீளக் கையேற்கும் பணியிலீடுபட்ட அலுவலர்களுக்கும் அவ்வொவ்வொரு நாள் பணிக்குமாக பின்வருமாறு கொடுப்பனவு செய்ய முடியும்.

| பணியாட் குழுவினர் | விநியோகித்தல் ரூ. | கையேற்றல் ரூ. |
|---|---|---|
| உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் | 1,600.00 | 2,600.00 |
| சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் | 1,350.00 | 2,100.00 |
| கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் / எழுதுநர் | 1,000.00 | 1,600.00 |
| கனிட்ட ஊழியர் | 900.00 | 1,300.00 |

CE 47 அல்லது CE 48 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான சான்றிதழ் தவிர்ந்த ஏனைய படிவங்களுக்கமைய வரவுச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கின்ற அலுவலர்களுக்கு இக்கொடுப்பனவை மேற்கொள்ளக் கூடாது.

7.3 அலுவலரொருவருக்குக் கொடுப்பனவு செய்ய முடிவது, 7.1 அல்லது 7.2 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படிகளில் ஒன்றை மாத்திரமேயாகும். ஆயினும் தேவையான அலுவலர்கள் போதியளவில் காணப்படாமையினால் அல்லது விஷேட சந்தர்ப்பமொன்றில் இப்பணிகளை ஆற்றிய அலுவலர் ஒருவர் வேறொரு பணியை ஆற்றியிருப்பின் அதனோடு தொடர்புடைய நியமனக் கடிதம் மற்றும் வரவுச் சான்றிதழுக்கமைய அதனோடு தொடர்புடைய கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியுமாயினும் அதற்காக அலுவலர் தேர்தல் பணிக் கடமையை ஆற்றிய மாவட்டத்தின் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளரின் சான்றுப்படுத்தலுக்கமைய அக்கொடுப்பனவை வழங்க வேண்டும்.

7.4. வாக்கெண்ணல் மற்றும் முடிவுகளை வெளியிடல் / அட்டவணைப்படுத்தல் பணிகளில் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களுக்கு மேற்குறித்த 7.1 அல்லது 7.2 இல் குறிப்பிடப்பட்ட படிகளைக் கொடுப்பனவு செய்யக்கூடா.

7.5 மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் எழுத்து மூலம் நியமனமொன்று வழங்கப்பட்டு வாக்கெண்ணும் கடமைகளில் ஈடுபட்ட அலுவலர் ஒருவருக்கு / ஊழியரொருவருக்குக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான வரவுச் சான்றிதழொன்றினூடாக அதுபற்றி நிரூபிக்கப்படுமாயின் அவர்களுக்கு ஒவ்வொரு பணிக்குமாக கீழ் குறிப்பிடப்பட்டவாறான படியினைக் கொடுப்பனவு செய்யலாம். தலைமை வாக்கெண்ணும் அலுவலரின் படியைக் கொடுப்பனவு செய்வதற்காக PE-6 படிவத்திலான நியமனமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

| பணியாட் குழுவினர் | படி ரூ | வரவுச் சான்றிதழின் இலக்கம் |
|---|---|---|
| தலைமை வாக்கெண்ணும் அலுவலர் | 8,000.00 | CE50 |
| பிரதித் தலைமை வாக்கெண்ணும் அலுவலர் | 5,400.00 | CE54 |
| உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் | 5,000.00 | CE49 |
| சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் | 4,300.00 | CE49 |
| மேலதிக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் | 3,600.00 | CE49 |
| கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர் / எழுதுநர் | 2,900.00 | CE49 |
| அலுவலக உதவியாளர் | 1,900.00 | CE49 |

7.6. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் எழுத்து மூலமான நியமனமொன்று மேற்கொள்ளப்பட்டு, முடிவுகளை வெளியிடல் / அட்டவணைப்படுத்தல் கடமைகளில் ஈடுபட்ட அலுவலர்களுக்கு CE 55 என்ற வரவுச் சான்றிதழினூடாக நிரூபிக்கப்படுமிடத்து மேற்குறித்த 7.5 இன் கீழான அட்டவணையிலுள்ளவாறு ஒவ்வோர் அலுவலரின் / ஊழியரின் தேர்தல் கடமைக்கான உரிய பதவிக்கமைய உரித்தான படியைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

7.7 மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் எழுத்துமூல நியமனமொன்று வழங்கப்பட்டு CE 52 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழொன்றினூடாக நிரூபிக்கப்படுமாயின் பிரதேச இணைப்பு அலுவலகமொன்றில் வாக்கெடுப்புப் பிரிவு / பிரதேச செயலக மட்டத்தில் அமைக்கப்படுகின்ற அலுவலகமொன்றில் பணியாற்றிய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் / சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர் / கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் / எழுதுநர் அல்லது அலுவலக உதவியாளருக்குக் கீழ் குறித்தவாறான படிகளை வழங்க முடியும்.

| பணியாட் குழுவினர் | படி ரூ. | வரவுச் சான்றிதழின் இலக்கம். |
|---|---|---|
| பிதேச இணைப்பு அலுவலகமொன்றின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் | 4,000.00 | CE 52 |
| சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் | 3,250.00 | CE 52 |
| கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர் / எழுதுநர் | 2,100.00 | CE 52 |
| அலுவலக உதவியாளர் | 1,750.00 | CE 52 |

★ பிரதேச செயலாளரினதும் உதவிப் பிரதேச செயலாளரினதும் படிகள் உரிய மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களால் கொடுப்பனவு செய்யப்படும்.

7.8 CE 53 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதலொன்றினூடாக நிரூபிக்கப்படுமாயின் மாத்திரம் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணலோடு தொடர்புடைய குழுக் கடமைகளில் (போக்குவரத்து, நலன்புரி, பொதுவசதிகள் போன்ற குழுக்களில்) அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள பதவிக்கமைய 7.2 மற்றும் 7.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள படிகளை அவர் பணியாற்றிய தேர்தல் அலுவலகத்தினூடாகக் கொடுப்பனவு செய்யுமாறு பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு விஷேட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

7.9. CE 56 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நிரூபிக்கப்படுமிடத்து மாத்திரம் மண்டப இணைப்புப் பணிகளில் ஈடுபட்ட பணிக்குழுவினருக்குப் படியொன்றைக் கொடுப்பனவு செய்ய முடியும். இப்படியை அவர் சேவையாற்றிய தேர்தல் அலுவலகம் கொடுப்பனவு செய்ய வேண்டுமென பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்குப் பிரத்தியேக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

7.10. பாராளுமன்றத் தேர்தலில் கோவிட் - 19 தொற்றுப் பரவலைத் தவிர்ப்பதற்காக ஒவ்வொரு பணியிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட சுகாதார சேவையின் பல்வேறு தரங்களையும் சேர்ந்த அலுவலர்கள் எனது 2020/02 என்ற சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அவர்களின் ஒருங்கிணைந்த வேதனத்திற்கமைய தேர்தல் கடமைப் பதவிகளுக்குரிய படிகள், பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகள் என்பவற்றை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களூடாகக் கொடுப்பனவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆதலால் சுகாதார சேவை அலுவலர்களின் தேர்தல் படிகள், பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகளைக் கொடுப்பனவு செய்வதற்குத் தயாரிக்கப்பட்ட வவுச்சர்களை உரிய நிறுவனத் தலைவர்களின் பரிந்துரை சகிதம் தமது நிரந்தர சேவை நிலையம் அமையப் பெற்றுள்ள மாவட்டங்களின் தேர்தல்கள் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும்.

(i). வாக்களிப்பு தினத்தோடு தொடர்புடைய சுகாதாரக் கடமைகளை ஆற்றிய அலுவலர்களுக்கு CE/HPO வரவுச் சான்றிதழ் மூலம் வரவு நிரூபிக்கப்படுமாயின் கீழ்வரும் படிகளைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

| பணியாட் குழுவினர் | படி. ரூ. |
|---|---|
| உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் மட்டத்திலான அலுவலர் | 4,500.00 |
| சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மட்டத்திலான அலுவலர் | 4,200.00 |
| கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ எழுதுநர் மட்டத்திலான அலுவலர். | 2,400.00 |
| அலுவலக உதவியாளர் சேவை மட்டத்திலான அலுவலர் | 2,000.00 |

(ii). விநியோக / கையேற்பு நிலையங்களிலும், வளவுகளிலும் கடமையாற்றிய சுகாதாரப் பணியாட் குழுவினருக்கு CE/HCO வரவுச் சான்றிதழ் ஊடாக வரவு நிரூபிக்கப்படுமாயின் கீழ்வரும் படிகளைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

| பணியாட் குழுவினர் | விநியோகிக்கப்பட்ட ரூ. | கையேற்கப்பட்ட ரூ. |
|---|---|---|
| உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் மட்டத்திலான அலுவலர் | 1,600.00 | 2,600.00 |
| சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மட்டத்திலான அலுவலர் | 1,350.00 | 2,100.00 |
| கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ எழுதுநர் மட்டத்திலான அலுவலர். | 1,000.00 | 1,600.00 |
| அலுவலக உதவியாளர் சேவை மட்டத்திலான அலுவலர் | 900.00 | 1,300.00 |

(iii). வாக்கெண்ணும் நிலையங்களில், வளவுகளில், முடிவுகளை வெளியிடல் மற்றும் அட்டவணைப்படுத்தல் நிலையங்களில் கடமையாற்றிய சுகாதாரப் பணியாட் குழுவினர்களின் அலுவலர்களுக்காக CE/HCO என்ற வரவுச் சான்றிதழ்களினூடாக வரவு நிரூபிக்கப்படுமாயின் கீழ் குறித்த படிகளைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

| பணியாட் குழுவினர் | கொடுப்பனவு ரூ. |
|---|---|
| தலைமை வாக்கெண்ணும் அலுவலர் மட்டத்திலான அலுவலர் | 8,000.00 |
| உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் மட்டத்திலான அலுவலர் | 5,000.00 |
| சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மட்டத்திலான அலுவலர் | 4,300.00 |
| கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்/ எழுதுநர் மட்டத்திலான அலுவலர். | 2,900.00 |
| அலுவலக உதவியாளர் சேவை மட்டத்திலான அலுவலர் | 1,900.00 |

கோவிட் - 19 தொற்றுப் பரவலைத் தவிர்ப்பதற்காக சேவையிலீடுபடுத்தப்பட்ட சுகாதாரப் பணியாள் குழுவினருக்கு CE/HPO மற்றும் CE/HCO ஆகிய படிவங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ள வரவுச் சான்றிதழ்களுக்கு மாத்திரம் உரிய படிகளைக் கொடுப்பனவு செய்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

**[கவனிக்கவும் :- 7.8, 7.9 மற்றும் 7.10 என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள படிகள் மாவட்ட தேர்தல் அலுவலகங்களூடாக கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளமையால் பொது 35 வவுச்சர் ஒன்றில் அலுவலரின் பெயர் மற்றும் ஆற்றிய பணிகள் தொடர்பாகக் குறிப்பிட்டு அதன் பின்புறத்தில் கையொப்பமிட்டு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு வவுச்சர்களைக் கையளிக்குமாறு சேவையிலீடுபட்டிருந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும். CE 53, CE 56, CE/HPO மற்றும் CE/HCO படிவங்களிலான வரவுச் சான்றிதழ்களோடு தொடர்புடைய படிகளை தமது நிரந்தர சேவை நிலையத்தினூடாக கொடுப்பனவு செய்யக் கூடாதென்பதோடு அத்தகைய கொடுப்பனவுகள் மீள்நிரப்புச் செய்யப்படமாட்டா.]**

7.11. நிலவுகின்ற கோவிட் தொற்று நிலமையின் கீழ் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் தேர்தல் கடமைகளை ஆற்றியமைக்காக பணியாட் குழுவினர் அனைவருக்கும் ஒருவருக்கு ரூ.500/= வீதம் ஊக்குவிப்புப் படியொன்றை கொடுப்பனவு செய்வதற்காக தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரையைப் பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து அதற்கான அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அந்தப் படியைக் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அனுமதி வழங்கப்படும் வரை இந்தப் படியை உங்களது நிறுவனத்தினூடாக கொடுப்பனவு செய்யக் கூடாது.

7.12. தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய ஒப்படைக்கப்பட்ட விஷேட தேர்தல் கடமைகளை நிறைவேற்றிய அலுவலர்கள் இருப்பின் அவ்வாறான அலுவலர்களுக்கு செலுத்தவேண்டிய படிகளுக்கான உறுதிச்சீட்டுக்களை (வவுச்சர்களை) அந்த விஷேட கடமைகளை நிறைவேற்றிய மாவட்டத்தின் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களிடம் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளமையினால் அதற்கிணங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தங்களது அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குதல் வேண்டும்.

7.13 அரசாங்க சேவையிலீடுபட்டுள்ள சாரதிகள் தவிர்ந்த மேலே குறிப்பிடப்பட்டுள்ள 7.1, 7.2, 7.5 மற்றும் 7.7 ஆகிய உப பந்திகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படிகளைப் பெற்றுக்கொள்கின்ற அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு அக்காலப் பகுதிக்காக மேலதிக நேர அல்லது விடுமுறைதின சம்பளங்களைக் கொடுப்பனவு செய்தலாகா.

**8. அரசாங்க வாகனங்களின் சாரதிகளுக்கான கொடுப்பனவுகள்**

8.1. தேர்தல் ஆணைக்குழுவின் அல்லது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் கோரிக்கைக்கமைய ஆகஸ்ட் 02 ஆம் திகதியிலிருந்து ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி (அவ்விரண்டு தினங்களும் உள்ளிட்ட) வரையிலான காலப் பகுதிக்குள் மாத்திரம் தேர்தலோடு தொடர்புடைய கடமைகளிலீடுபடுத்தப்பட்டு CE 51 என்ற அச்சிடப்பட்ட படிவத்திலான வரவுச் சான்றிதழ் ஒன்றினூடாக நிரூபிக்கப்படுமிடத்து, அரசாங்க அலுவலகங்கள் / நிறுவனங்களில் நிரந்தர சேவையிலுள்ள சாரதிகளுக்கு மேலதிக நேர, பிரயாணச் செலவின மற்றும் இணைந்த படிகளை அவர்களின் நிரந்தர சேவை நிலையங்களூடாக கொடுப்பனவு செய்யவேண்டுமென்பதோடு, இராஜகிரியவில் அமையப்பெற்றுள்ள தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து அக்கொடுப்பனவுகளை மீள் நிரப்புச் செய்துகொள்ள முடியும்.

8.2 எவ்வாறாயினும் தேர்தல் கடமைகளோடு தொடர்புடைய சேவைகளிலீடுபட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள சாரதிகளுக்கான கொடுப்பனவுகளுக்குரிய வவுச்சர்கள் அவர்கள் சேவையாற்றிய மாவட்டத்தின் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

I. <u>ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி வரையிலான</u> 07 நாள் காலப் பகுதிக்குப் புறம்பான நாட்களில் தேர்தல் பணிகளுக்குரிய சேவையில் ஈடுபட்டுள்ள சாரதிகளுக்கான அனைத்து கொடுப்பனவுகள்.

II. <u>மாவட்டச் செயலகங்களின் சாரதிகள் மற்றும் அம்மாவட்டச் செயலகங்களிலிருந்து சம்பளம் பெறுகின்ற ஏனைய அரசாங்க அலுவலகங்களின் சாரதிகளுக்கான கொடுப்பனவுகள்.</u>

III. <u>பிரதேச செயலகங்களின் சாரதிகள் மற்றும் அப்பிரதேச செயலகங்களிலிருந்து சம்பளம் பெறுகின்ற ஏனைய அலுவலகங்களின் சாரதிகளின் கொடுப்பனவுகள்.</u>

மேற்குறித்த 8.2 ஆம் உப பந்தியின் கீழ் காட்டப்பட்டுள்ள வகுதிகளுக்குரிய சாரதிகளுக்கு தமது நிரந்தர சேவை நிலையங்களிலிருந்து கொடுப்பனவுகளை மேற்கொள்ளக் கூடாதென்பதோடு, அத்தகைய கொடுப்பனவுகளை மீள்நிரப்புச் செய்வதற்கான கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

8.3. தேர்தல் தினங்களிலும் கூட பாதுகாப்புத் தேவை கருதி சேவையிலீடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் படிகள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் சேவையிலீடுபடுத்தப்பட்ட வாகனங்களின் சாரதிகளுக்கான படிகள், மேலதிக நேரக் கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணச் செலவினங்களை பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொலிஸ் திணைக்களம் என்பவற்றுக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளிலிருந்து அந்நிறுவனங்களினால் கொடுப்பனவு செய்யப்படுகின்றமையால் அத்தகைய கொடுப்பனவுகளை நீங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது.

8.4 தேர்தல் கடமைகளிலீடுபட்டுள்ள சாரதிகளுக்கான காத்திருப்புச் சேவைக்காக தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் உப பிரிவிற்கு அமைய மேலதிக கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

**9. தேர்தல் அறிவுறுத்தல் வகுப்புக்களில் பங்குபற்றுவதற்கான கொடுப்பனவுகள்**

9.1. அலுவலர்களுக்கு செலவினமின்றி கலந்துகொள்வதற்கேற்றவாறு அறிவுறுத்தல் வகுப்புக்களை நடாத்துவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் அறிவுறுத்தல் வகுப்புக்களில் கலந்துகொள்வதற்காக செலவிடப்பட்ட பிரயாணச் செலவுகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற அலுவலர்கள் அதற்காக தமது பிரயாணச் செலவு வவுச்சரை அறிவுறுத்தல் வகுப்புக்கு அழைப்பு விடுத்த மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தின் பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அறிவுறுத்தல் வகுப்புக்கள் இராஜகிரியவில் அமையப்பெற்றுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் அழைப்பிற்கமைய நடாத்தப்பட்டிருப்பின் அதற்கான பிரயாணச் செலவு வவுச்சர்களை இராஜகிரிய தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக / பிரதித் தேர்தல்கள் ஆணையாளருக்கு (நிருவாகம்) சமர்ப்பித்தல் வேண்டும்.

9.2 அறிவுறுத்தல் வகுப்புக்களுக்குச் செல்வதற்கான வாடகை வாகனக் கட்டணம் அல்லது இரவல் எடுக்கப்பட்ட வாகனங்களுக்கான பிரயாணக் கட்டணங்கள் / மைல் கூலி கொடுப்பனவு செய்யப்பட மாட்டா. தனது தனிப்பட்ட / வாழ்க்கைத் துணையின் வாகனத்தை அதற்காகப் பயன்படுத்தியதாக அறிவுறுத்தல் வகுப்பை நடாத்துவதற்காக அழைப்புவிடுத்த பதவிநிலை அலுவலரினால் விநியோகிக்கப்பட்ட முறையான சான்றிதழொன்றினூடாக நிரூபணமாகுமிடத்து மாத்திரம் தனிப்பட்ட வாகனத்திற்கான பிரயாணக் கட்டணம் / மைல் கட்டணத்தைக் கொடுப்பனவு செய்ய முடியும். அறிவுறுத்தல் வகுப்பில் கலந்துகொண்ட அலுவலர் இப்பணிக்காகப் பயன்படுத்திய வாகனம் பெற்றோல் வாகனமா, டீசல் வாகனமா எனக் கொடுப்பனவு செய்கின்ற அலுவலர் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

9.3 அறிவுறுத்தல் வகுப்புக்களில் கலந்துகொண்ட அலுவலர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கான நிதியை ஒதுக்கித் தருமாறு நிறுவனத் தலைவர்கள் கோரிக்கை விடுக்கக்கூடாது. அதேபோன்று அறிவுறுத்தல் வகுப்புக்களில் கலந்துகொண்டவர்களுக்குத் தமது நிரந்தர சேவையினூடாகக் கொடுப்பனவு செய்து அந்நிதித் தொகையை மீள்நிரப்புச் செய்துதருமாறு தேர்தல் ஆணைக்குழுவிடமோ மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களிடமோ கோரக் கூடாது.

9.4. அறிவுறுத்தல் வகுப்புக்களில் கலந்துகொண்டமைக்காக பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகள் தவிர்ந்த விடுமுறை தின சம்பளங்கள் அல்லது மேலதிக நேரப் படிகள் கொடுப்பனவு செய்யப்பட மாட்டா.

**10. தமது நிரந்தர சேவை நிலையத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளை மீள்நிரப்புச் செய்யப்படுவதற்கு/ ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அட்டவணைகள்.**

10.1 இச்சுற்றறிக்கைக்கமைய தமது நிரந்தர சேவை நிலையங்களூடாகக் கொடுப்பனவு செய்த அலுவலர்களின் விபரங்கள் (சாரதிகள் தவிர்ந்த) இணைக்கப்பட்டுள்ள "ஏ" படிவத்திற்கமைய நிரப்பப்பட்ட அட்டவணையொன்றினூடாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படுவதன் மூலம் அந்நிதித் தொகையை மீள்நிரப்புச் செய்துகொள்வதற்கு / அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

10.2 இங்கு 8.1 ஆம் உப பந்தியின் கீழ் அரசாங்க வாகனங்களின் சாரதிகளுக்கான மேலதிக, பிரயாணச் செலவின மற்றும் இணைந்த படி கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் இணைக்கப்பட்டுள்ள "பி" படிவத்திற்கமைய நிரப்பப்பட்ட அட்டவணையொன்றினூடாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்புவதன் மூலம் அக்கொடுப்பனவினை மீள்நிரப்பிக் கொள்ள அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

10.3 மேற்குறித்த அட்டவணைகளோடு கொடுப்பனவு செய்யப்பட்ட வவுச்சர்களின் மூலப் பிரதிகளை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தலாகாது. அவற்றைக் கொடுப்பனவு செய்த நிறுவனத்தின் கணக்காய்வுத் தேவைப்பாட்டிற்காக வைத்திருத்தல் வேண்டும்.

10.4 கொடுப்பனவு அட்டவணைகளை மாத்திரம் இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்பதோடு, இரட்டைக் கொடுப்பனவுகளைத் தவிர்ப்பதற்காக ஓர் அட்டவணைக்குள் உட்சேர்க்கப்பட்ட பெயர்களை மீண்டும் மீண்டும் உட்சேர்க்கலாகாது. மேலும் தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கப்படுகின்ற அட்டவணைகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படமாட்டா.

10.5. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள "ஏ" மற்றும் "பி" மாதிரிப் படிவங்களுக்கமைய எதிர்பார்க்கப்பட்ட தகவல்களை முழுமையாகவும், சரியாகவும் அளித்தல் வேண்டும். அவ்வாறே அலுவலர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படுகின்ற பல்வேறு படிகளை வெவ்வேறாக உரிய படிவத்தில், உரிய நிரல்களில் சரியாகக் குறிப்பிடுதல் வேண்டும். முழுமையற்ற அல்லது பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் உசாவுவதற்கும், சரியான தகவல்கள் பற்றித் தேடிப் பார்ப்பதற்கும் நேரிடுவதால் அத்தகைய கொடுப்பனவுகள் தாமதிக்க முடியும்.

10.6. அமைச்சுக்கள் மற்றும் அரசாங்கத் திணைக்களங்களின் அலுவலர்களுக்கு அவ்வலுவலகங்களின் கட்டுநிதிகளினூடாகவும், கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் போன்ற அரசாங்கத்தின் ஏனைய அலுவலகங்களின் அலுவலர்களுக்கு அந்நிறுவனங்களின் நிதியத்தினூடாகவும் இக்கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும்.

**11. மீள்நிரப்புச் செய்யப்படுகின்ற கொடுப்பனவுகளோடு தொடர்புடைய அட்டவணைகளைத் தயாரித்தல்.**

11.1 தலைமை வாக்கெண்ணும் அலுவலர்கள், பிரதித் தலைமை வாக்கெண்ணும் அலுவலர்கள், வலயத்திற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், வாக்குப்பெட்டிகளை விநியோகித்தல் மற்றும் கையேற்றல், வாக்கெண்ணலுக்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள், மேலதிக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், கனிட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், விசேட கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்கள், எழுதுநர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்களாகப் பணியாற்றிய பணியாட் குழுவினர்களுக்கான கொடுப்பனவுகள் இணைக்கப்பட்டுள்ள "ஏ" படிவத்தில் சரியாக உட்சேர்க்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

11.2.I ஒவ்வோர் அலுவலருக்கும் கொடுப்பனவு செய்யப்படுகின்ற பிரயாணச் செலவினங்கள், இணைந்த படிகள் மற்றும் மைல் கூலிகள் என்பவற்றின் மொத்தம் "ஏ" படிவத்தின் 5 ஆம் நிரல் காட்டப்படல் வேண்டும். அரசாங்க சேவையைச் சாராத சாரதிகள் / அலுவலக உதவியாளர்கள் ஆகியோருக்குக் கொடுப்பனவு செய்யப்படுகின்ற பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகள் "ஏ" படிவத்தின் 10 ஆம் நிரலில் காட்டப்படல் வேண்டும்.

II சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஒருவரினால் வாக்களிப்பு நிலையப் பணிகளுக்கான அலுவலக உதவியாளராக அரசாங்க சேவையைச் சாராத உதவியாளரொருவரை சேவையிலீடுபடுத்தியுள்ள சந்தர்ப்பமொன்றில், சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் பெயரிலேயே அவ்வுதவியாளரின் பிரயாணச் செலவினங்கள், இணைந்த படிகள் மற்றும் வாக்களிப்பு நிலையப் படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின், அச்சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் பெயரின் எதிரில் அவ்வுதவியாளரின் பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படிகள் என்பவற்றை "ஏ" படிவத்தின் 5 ஆம் நிரலில் உட்சேர்த்து வாக்களிப்பு நிலையப் படியை மாத்திரம் 10 ஆம் நிரலில் காட்டுதல் வேண்டும்.

III. சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரொருவரால் வாக்களிப்பு நிலையப் பணிகளுக்காக அலுவலக உதவியாளரொருவராக அரசாங்க சேவையைச் சாராத உதவியாளரொருவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளவிடத்து சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலரின் பெயரில் அக்கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ளாது உதவியாளரின் பெயரில் வவுச்சர் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில் "ஏ" படிவத்தின் 2 ஆம் நிரலில் நிரந்தரப் பதவி என்பதின் கீழ் "அரசாங்க சேவையை சாரா ஊழியர்" எனக் குறிப்பிட்டு மேற்குறித்த 11.2 (II) இற்கு அமைய, பிரயாணச்

செலவினங்கள் மற்றும் இணைந்த படிகளை உரிய படிவத்தின் 5 ஆம் நிரலிலும், வாக்களிப்பு நிலையப் படியை 10 ஆம் நிரலிலும் காட்டுதல் வேண்டும்.

11.3 தமது நிரந்தரக் கடமைக்காக வாகனமொன்று (Assigned Vechicle) குறித்தொதுக்கப்பட்டுள்ள அலுவலரொருவர் தேர்தல் கடமைக்காக அவ்வாகனத்தை எடுத்துச் சென்றுள்ள சந்தர்ப்பங்களில் அவ்வாகனத்தை செலுத்திய அரசாங்க சேவையின் சாரதிக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை "பி" படிவத்தில் குறிப்பிட வேண்டுமென்பதோடு, அச்சாரதியின் பெயரின் எதிரே 4 ஆம் நிரலில் வாகனத்தை தேர்தல் கடமைக்காக எடுத்துச் சென்ற பதவிநிலை அலுவலரின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிக்கையிட்ட குழாத்தின் வாகனம் (Pool Vechicle) ஒன்றாயின் 4 ஆம் நிரல் வெற்றாக விடப்படல் வேண்டும்.

11.4 மீள்நிரப்புக்காக சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையின் மீள்நிரப்புக் காசோலை எழுதப்படவேண்டிய விதம் ஆங்கில மொழியில் மாத்தி குறிக்கப்படல் வேண்டும்.

**12. கொடுப்பனவைத் துரிதப்படுத்துவதற்காக அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படுகின்ற படிகள்.**

12.1 அனைத்து அலுவலர்களினதும் பிரயாணச் செலவினங்கள், மேலதிக நேரப் படிகள் மற்றும் வேறு படிகள் தேர்தல் தினத்திலிருந்து 75 நாட்களுக்குள் கொடுப்பனவு செய்யப்பட்டு நிறைவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

12.2 தேர்தல் பணிகளில் பெருந்தொகையான அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டிவந்த அலுவலகங்களின் பணிக்குழுவினருக்கு உரித்தான படிகளை விரைவில் பெற்றுக்கொள்வதை இலகுபடுத்துவதற்காக உரிய வவுச்சர்களை பரிசீலித்தல், அத்தாட்சிப்படுத்தல், அட்டவணைப்படுத்தல், காசோலைகளை எழுதுதல், கொடுப்பனவுகள் மற்றும் கணக்குகளைப் பதிதல் போன்ற அனைத்துப் பணிகளிலும் ஈடுபடுகின்ற அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையொன்றை வழங்கத்தக்கவாறு நிதி வழங்கப்படும்.

12.3 இச்சுற்றறிக்கையோடு இணைக்கப்பட்டிருக்கும் "ஏ" மற்றும் "பி" படிவங்களுக்கமைய தயாரிக்கப்பட்ட தேர்தல் பணியாட்குழு கொடுப்பனவு அட்டவணைகளை சரியாகவும், துரிதமாகவும் இராஜகிரியவில் அமையப்பெற்றுள்ள தேர்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிப்பதைக் கருத்திலெடுத்து 12.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஊக்குவிப்புத் தொகையைக் கொடுப்பனவு செய்வதற்காகத் தேவையான மேலதிக நிதி மீள்நிரப்பின் போது உங்களுக்கு வழங்கப்படும்.

12.4 எது எவ்வாறாயினும், தேர்தல் தினத்திலிருந்து 75 நாட்கள் கடந்ததன் பின்னர் இராஜகிரியவில் அமையப்பெற்றுள்ள தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப் பெறுகின்ற அட்டவணைகளுக்கும், இவ்வறிவுறுத்தல்களுக்குப் புறம்பாகச் சென்று பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகின்ற அட்டவணைகளுக்கும், தயாரிப்புத் தவறுகள், தட்டச்சிடல் தவறுகள், கூட்டல் தவறுகள் என்பவற்றுடன் கூடியதாக சமர்ப்பிக்கப்படுகின்ற அட்டவணைகளுக்கும் 10 அலுவலர்களுக்குக் குறைந்த எணணிக்கையினரின் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய அட்டவணைகளுக்கும் மேற்குறித்த மேலதிக நிதி வழங்கப்பட மாட்டா.

12.5 கொடுப்பனவு அட்டவணைகளை இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்க முன்னர் அதன்மூலம் கோரப்பட்டுள்ள அனைத்து விபரங்களும் சரியாக உட்சேர்க்கப்பட்டுள்ளனவா என பரிசீலித்துப் பார்க்குமாறும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிதித் தொகை தொடர்பான விபரங்கள் தட்டச்சிடப்பட்டதன் பின்னர் மீண்டும் அவற்றைக் கூட்டிப் பார்க்குமாறும் கேட்டுக்கொள்வதோடு, <u>அவ்வட்டவணைகள் பல பக்கங்களைக் கொண்டவையாகவிருப்பின் ஒவ்வொரு பக்கத்தின் ஈற்றிலுமுள்ள உப கூட்டுத்தொகை, அனைத்துப் பக்கங்களினதும் உப கூட்டுத்தொகைகளின் கூட்டுத்தொகை என்பன இறுதிப் பக்கத்தின் மொத்தக் கூட்டுத்தொகையாக இடப்பட வேண்டும்.</u> அதேபோன்று மாதிரிப் படிவத்திலுள்ளவாறு <u>அலுவலர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்காக அலுவலர்களின் பெயர்களுக்கெதிரே தொடரிலக்கத்தை</u> குறிப்பிடுதல் கட்டாயமாகும். கொடுப்பனவுகள் மீள்நிரப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவருகின்ற குறித்துக்கொள்ளல் மற்றும் தட்டச்சிடல் தவறுகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் அவசியமற்றதென்பதோடு, குறைவாகவுள்ள நிதித் தொகையை மேற்குறித்த கொடுப்பனவுப் பணியாட் குழுவிற்கு வழங்கப்படுகின்ற படியிலிருந்து கழிவீடு செய்து கொள்ளல் வேண்டும்.

**13. ஏனைய விடயங்கள்**

13.1 இச்சுற்றறிக்கையில் காணப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கமைய தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட பணிக்குழுவினருக்கு உரித்தான படிகளைப் பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர்களைத் தயார்செய்து துரிதமாக சமர்ப்பிக்குமாறு உங்களது அலுவலர்களையும், ஊழியர்களையும் அறிவூட்ட நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

13.2 பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகளை தேர்தல் முடிவடைந்து 75 நாட்களுக்குள் அல்லது அதற்கு முன்னர் கொடுப்பனவு செய்து முடிக்கப்படவுள்ளமையினால் விதிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கொடுப்பனவு வவுச்சர்களை சமர்ப்பிக்காவிடின் அவர்களுக்கு உரிய ஊக்குவிப்புப் படிகளைப் பெற்றுக்கொள்ள முடியாமற் போகக் கூடும்.

13.3 மீள்நிரப்பல்களுக்கான கோரிக்கைகள் துரிதமாக இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்பதோடு, அக்கோரிக்கைகளை உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கோ அல்லது பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கோ சமர்ப்பிக்கக் கூடாது.

13.4 நிதி மீள்நிரப்பலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணைகள் கிடைக்கப்பெற்றவுடன் அதுபற்றி அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். அதற்கான பதிலொன்று கிடைக்கப்பெறாவிடத்து அக்கடிதம் காணாமல் போய்விட்டதாகக் கருதப்பட வேண்டுமென்பதோடு, அதுபற்றி பதிவுத் தபாலில் எனக்கு அறிவித்தல் வேண்டும்.

13.5 எரிபொருள் செலவினத்தை மீள்நிரப்புச் செய்வதற்காக உங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற அட்டவணைகளை (AV – 1 மற்றும் PV – 1) பரிசீலித்தல் இவ்வாணைக்குழுவின் போக்குவரத்துப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். ஆதலால் அம்மீள்நிரப்பல் தொடர்பாக செய்யப்படுகின்ற அனைத்து உசாவல்களும் போக்குவரத்துப் பிரிவிற்குப் பொறுப்பான பதவிநிலை அலுவலரோடு மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) தொடர்புகொண்டு உரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

13.6 மேற்குறித்த அறிவுறுத்தலுக்கமைய அட்டவணைகளை சமர்ப்பித்து மீள்நிரப்புச் செய்து கொள்ளாத கொடுப்பனவுகள் தொடர்பான முழுப் பொறுப்பும் கொடுப்பனவை மேற்கொண்ட அலுவலரைச் சாருமென்பதையும் உரிய தினத்திற்குள் மீள்நிரப்புச் செய்து கொள்ளாத கொடுப்பனவுகள் தொடர்பாக இவ்வாணைக்குழு பொறுப்பேற்க மாட்டாதென்பதையும் தயவன்புடன் அறியத் தருகின்றேன்.

13.7 2020.08.05 ஆம் தேதி நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலோடு தொடர்புடையதாக வெளியிடப்பட்டுள்ள பணியாட் குழுவினருக்கான இக் கொடுப்பனவுச் சுற்றறிக்கை மற்றும் (போக்குவரத்துப் பணிகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் உரிய) படிவங்களை தேர்தல் ஆணைக்குழுவின் www.electios.gov.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசித்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதையும் தயவன்புடன் அறியத்தருகின்றேன்.

தேர்தல் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
தேர்தல் ஆணைக்குழு

**பிரதிகள் :-**

1. கணக்காய்வாளர் அதிபதி
2. தலைமை அலுவலகத்தின் அனைத்து பதவிநிலை அலுவலர்கள்
3. மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள்

} அறிந்து கொள்வதற்கும் இச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய கொடுப்பனவு செய்வதற்கும்

"பி" படிவம்

எனது இலக்கம் :-

உமது இலக்கம் :- FE/111/2020

திகதி :-

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,

**பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05**

**<u>தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட அரசாங்க சேவை சார்ந்த சாரதிகளின் கொடுப்பனவுகளை மீள்நிரப்பிக் கொள்ளல் / நிதி ஒதுக்கீடுகளைக் குறித்தொதுக்கல்.</u>**

2020.08.05 ஆந் தேதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் பணிகளில் ஈடுபட்ட இந்நிறுவனத்தின் சாரதிகளுக்கு உங்களது சம இலக்க மற்றும் 2020.08.12 ஆந் தேதிய 2020/03 ஆம் இலக்க கொடுப்பனவுகள் சுற்றறிக்கைக்கமைய ரூபா …………… உம் ……………….. சதமுமான நிதிக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அந்த ஒவ்வொரு சாரதிக்கும் கொடுப்பனவு செய்யப்பட்ட கொடுப்பனவுகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு. இந்நிதியை மீள்நிரப்புச் செய்வதற்காக ………………………………………………………………………………. என்ற பெயரில் காசோலையொன்றை / நிதி ஒதுக்கீடுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (ஆங்கில மொழியில் மாத்திரம் எழுதப்படல் வேண்டும்)

நிறுவனத்தின் பெயர் :-

நிறுவனத்தின் முகவரி :-

தொலைபேசி இலக்கம் :-

……………………………………………..

(நிறுவனத் தலைவர்)

பதவிப் பெயர் :- …………………………………

| தொடரிலக்கம் | (01) சாரதியின் பெயர் | (02) வாகனத்தின் இலக்கம் | (03) வாகனம் குறித்தொதுக்கப்பட்டதா / குழாத்தினதாவென | (04) அலுவலரொருவருக்கு குறித்தொதுக்கப்பட்ட வாகனமொன்றாயின் அவ்வலுவலரின் பெயர் | (05) தேர்தல் கடமையிலீடுபட்ட மாவட்டம் | இணைந்த படி செலுத்தப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | (06) பிரயாணச் செலவினமும் இணைந்த படியும் (முழுப் பணிகளுக்குமாக) | (07) மேலதிக நேர மற்றும் விடுமுறை தின சம்பளங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ரூ. சதம் | | ரூ. சதம் | ரூ. சதம் |
| 1. | | | | | | | | |
| 2. | | | | | | | | |
| 3. | | | | | | | | |
| 4. | | | | | | | | |
| 5. | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | |

தயாரித்தவர் :-

கையொப்பம் :-

பெயர் :-

பதவி :-

பரிசீலித்தவர் :-

கையொப்பம் :

பெயர் :-

பதவி :-

“ஏ” படிவம்

எனது இலக்கம் :-

உமது இலக்கம் :- FE/111/2020

திகதி :-

தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்,

**பாராளுமன்றத் தேர்தல் - 2020.08.05**

**தேர்தல் கடமைக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் கொடுப்பனவுகளை மீள்நிரப்புச் செய்தல் / நிதி ஒதுக்கீடுகளைக் குறித்தொதுக்கல்.**

2020.08.05 ஆந் தேதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் கடமையிலீடுபடுத்தப்பட்ட இந்நிறுவனத்தின் அலுவலர்களுக்கு உங்களது சம இலக்க மற்றும் 2020.08.12 ஆந் தேதிய 2020/03 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைய ரூபா …………… உம் ……………….. சதமும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வோர் அலுவலருக்கும் வழங்கப்பட்ட கொடுப்பனவு தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இந்நிதியை மீள்நிரப்புச் செய்வதற்காக ………………………………………………………………………………. என்ற பெயரில் காசோலையொன்றை / நிதி ஒதுக்கீடுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (ஆங்கில மொழியில் மாத்திரம் எழுதப்படல் வேண்டும்)

நிறுவனத்தின் பெயர் :-

நிறுவனத்தின் முகவரி :-

தொலைபேசி இலக்கம் :-

……………………………………………..

(நிறுவனத் தலைவர்)

பதவிப் பெயர் :- ………………………………….

| தொடரிலக்கம் | (01) அலுவலரின் பெயர் | (02) நிரந்தரப் பதவி | (03) தேர்தல் கடமையில் ஈடுபட்ட மாவட்டம் | (04) கடமையாற்றிய பதவி த.க.அ./ உ.தெ.அ./ சி.த.தா.அ./ மே.சி.த.தா.அ/ க.த.தா.அ./ வி.க.த.தா.அ./ எழுதுநர்/ | (05) பிரயாணச் செலவினங்கள், இணைந்த படிகள் மைல் கூலிக் கட்டணங்கள் (முழுப் பணிகளுக்குமாக) | இணைந்த படிக் கொடுப்பனவு செய்யப்பட்ட நாட்களின் எண்ணிக்கை | படிகள் (06) வாக்களிப்பு நிலையப் பணி | படிகள் (07) வாக்கெண்ணல் | படிகள் (08) விநியோகமும் கையேற்பும் | (09) வாகனங்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட விஷேட படி | (10) அலுவலர் அழைத்துச் சென்ற அரசாங்க சேவையைச் சாராத அலுவலக உதவியாளர் / சாரதி படி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ரூ. சதம் | | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் | ரூ. சதம் |
| 1. | | | | | | | | | | | |
| 2. | | | | | | | | | | | |
| 3. | | | | | | | | | | | |
| 4. | | | | | | | | | | | |
| 5. | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | |

தயாரித்தவர் :-

கையொப்பம் :-

பெயர் :-

பதவி :-

பரிசீலித்தவர் :-

கையொப்பம் :

பெயர் :-

பதவி :-